விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 009 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 12 வியாழக்கிழமை (28.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதே எமது இலக்கு
மகிந்த ராஜபக்ஷ

7ஆம் பக்கம் பார்க்க

## இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்

### அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு



(பதுளை)

நாட்டின் இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும். நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

பதுளை குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

15

## ஆலயத்தில் தேவாரம் ஓதியவர் மயங்கி விழுந்து மரணம்

(கரணவாய்)

பிள்ளையார் ஆலயத்தில் தேவாரம் ஓதிக்கொண்டிருந்த ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்

15

## இலங்கையில் அமைதி ஏற்பட

# அரசியல் தீர்வு மிகவும் அவசியம்

### சம்பந்தனுடனான சந்திப்பில் நியூசிலாந்து தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் அமைதி ஏற்பட மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.அச்சுவேலியில்

## டெங்கு காய்ச்சலால் இளைஞன் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சு

15

கிளிநொச்சியில்

## கிணற்றில் வீழ்ந்த குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரமந்தனாறு மயில்வாகனம்புரம் பகுதியில் கிணற்றில் வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம்

15



## இந்தியாவின் கரிசனைகளை இலங்கை செவிமடுக்க வேண்டும்

### இந். முன்னாள் வெளிவிவகார இணை அமைச்சர்



(புதுடில்லி)

வெளிநாட்டு கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது குறித்த இந்தியாவின் கரிசனைகளை இலங்கை செவிமடுக்க வேண்டும் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார இணை அமைச்சர் எம்ஜே. அக்பர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் சீனாவும் உண்மையில் இன்னமும் இராணுவ மோதலில்

15

## தீக்காயத்துக்குள்ளான நபரொருவர் உயிரிழப்பு

### நுளம்புக்கு புகைபோட்டபோது விபரீதம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் தீக்காயத்துக்குள்ளான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நுளம்புக்கு புகை போட்ட போதே குறித்த விபரீதம் இடம்பெற்றுள்ளது.

இதில் கே.கே.எஸ் பிரதான வீதி, மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை செல்வநாயகம் (வயது-75) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் டெங்கை கட்டுப்படுத்துவது சகலரதும் பொறுப்பு - அரச அதிபர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரிக்கும் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

குறிப்பாக எமது மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

இதன் தாக்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். டெங்கு தாக்கம் உள்ளிட்ட அனர்த்தங்களின்போது எவ்வளவு அக்கறையாக இருக்கின்றோம் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

தனிப்பட்ட முறையில் கூட இதற்கு நாம் எல்லோரும் பொறுப்பு. இந்த நிலைமைகளைப் பார்க்கின்ற போது அரச அதிபரான எனக்கு மிக வேதனையாக உள்ளது. ஒவ்வொருவரும் எப்போதும் சமூகம் சூழல் சார்ந்த அக்கறையோடு இருக்க வேண்டும்.

ஆகையினால் டெங்கு அனர்த்தப் பாதிப்பில் இருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும். முதலில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என கூறியுள்ளார். (ம)


**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) - மானிப்பாய்**

பதிவு இல./ Regd No : J/1605 of 21-03-1972

Email: manipalmdevelopment@gmail.com

எமது மானிப்பாய் ப.தெ.வ.அ. கூட்டுறவுச்சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் சகல பனைசார் உற்பத்திப் பொருட்களையும் வெளி மாவட்டங்களிற்கும் வெளிநாடுகளுக்கும் சந்தைப்படுத்துவதற்கான முகவர்களை தெரிவு செய்வதற்கான தகுதியான நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தில் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப் படாத வைப்புப் பணமாக 1000/- செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் : தலைவர் : மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,பிரதான வீதி,மானிப்பாய் என்ற முகவரிக்கு 10.01.2024க்கு முன்னராக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எமது இயக்குனர் சபையில் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான நிறுவனம் அல்லது தனியார் தெரிவு செய்யப்படுவர். சங்கத்தின் விண்ணப்ப படிவத்தில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :**

**021 225 5109**

**இ.பிரதீபன்**
**தலைவர்**

(C-8028)

**அ.குணசீலன்**
**செயலாளர்**



**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை


WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8031)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி **சுதந்தா விமலகுமார்** அவர்களின் அன்புத் தந்தை



**அமரர்**

**வேலாயுதர் கிட்டிணபிள்ளை**

(18395)

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தோற்றம்** 23.12.1938 **மறைவு** 26.12.2023

**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**உலகில்** 01.11.1982

**உள்ளத்தில்** 08.01.2023

**அமரர்**

## திரு. முத்துலிங்கம் சஞ்ஜீவன்

(தகவல் தொழில்நுட்பப் பொறியியலாளர்)

(18391)

இதுவும் கடந்து போகுமாம்;
கடந்திலை.
காலம் கவலையை மாற்றுமாம்;
மாற்றிலை.
உன்விதிக்கு சொட்டும் விலக்கில்லையெனில்
எம் கதிக்கு மட்டும் விலக்கேன்?
தருணத்து நினைவுகளாய்,
கன்னத்து நனைவுகளாய்,
நாமுள்ளவரை நீயும்.
நாயகமே போய்வா.

**12, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரவி வரும் வைரஸ் நோய்கள்

# வைத்திய ஆலோசனையின்றி மருந்துகளை உள்ளெடுக்க வேண்டாம்

### சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்து

(கொழும்பு)

**தற்போது பரவி வரும் இன்புளுவன்சா போன்ற வைரஸ் நோய்களுக்கு வைத்திய ஆலோசனையின்றி மருந்துகளை உட்கொள்வதினை தவிர்க்குமாறு சுகாதார திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.**

நீண்ட நாட்களாக காய்ச்சல் காணப்பட்டால் அரச வைத்திய சாலைக்கு சென்று வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் களுபோவில போதனா வைத்தியசாலையின் உடலியல் நிபுணர் வைத்தியர் நந்தன திக்மது கொட தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நிலவிவரும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இந்த வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்புளுவன்சா வைரஸ் காற்றில் வேகமாகப் பரவும் என்பதால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் முகக் கவசம் அணிந்து சுகாதார ஆலோசனைகளைப் பின் பற்றுவது அவசியம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, JN1 எனப்படும் கொவிட் மாறுபாடுடன் குழந்தைகளிடையே தற்போது பல சுவாச நோய்கள் பரவி வருவதாகவும், இந்த நாட்களில் இருமல் அல்லது சளி இருந்தால், முகக் கவசங்களை அணியுமாறும் லேடி ரிட்ஜ்வே வைத்திய சாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.27 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.07 அமெரிக்கடொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.57 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (நி-6)

## மீண்டும் அதிகரிக்கப்படவுள்ள எரிபொருள் விலை

(கொழும்பு)

எரிபொருள் விலை இம் மாத இறுதியில் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாதாந்த எரிபொருள் விலை திருத்தமே இதற்குக் காரணம் எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருளில் புதிதாக 18% வற் வரி சேர்க்கப்பட உள்ளதாகவும், ஆனால் எரிபொருளில் இருந்து 8% துறைமுக கட்டணங் கள் நீக்கப்பட்டதால், எரி பொருள் விலை 10%மட்டுமே அதிகரிக்க ப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விலை திருத்தங்கள் ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடை முறைப் படுத்தப்படும் எனவும் கூறப்படுகின்றது. (நி-6)

## பொருளாதார நெருக்கடியின் பாதிப்பு இன்னமும் தொடர்கிறது

### கடன் பிடியில் 54 வீதமான குடும்பங்கள் உள்ளதாக ஆய்வில் தகவல்

(கொழும்ப)

குடும்பங்களின் நிதி நிலைமைகளில் பொருளாதார நெருக்கடி கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்கள பொருளாதார ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

வருமானத்திலும் செலவுகளிலும் பொருளாதார நெருக்கடி கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனதெரிவித்துள்ள ஆய்வு இந்த நெருக்கடி குடும்பங்கள் எவ்வாறு நிதியைகையாள்கின்றன என்பதில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

பொருளாதார காரணங்களால் பல குடும்பங்களின் வருமானங்கள் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக அவர்கள் தங்களிடமுள்ள பணத்தை செலவிடும் முறையும் மாற்றமடைந்துள்ளது எனவும் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவீனங்களில் பொருளாதார நெருக்கடி கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக குடும்பங்கள் மூலோபாய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையிலும் சவாலான தருணங்களில் தங்களின் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன.

இதனால்60 வீதமான குடும்பங்களின் வருமானம் குறைவடைந்துள்ளமை ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் 54.9 வீதமான குடும்பங்கள் இன்னமும் கடனின் பிடியில் சிக்குண்டுள்ளன. இது இலங்கையின் குடும்பங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை. ஏதாவதொரு நிதி கடப்பாட்டில் அல்லது வருமையில் சிக் குண்டிருக்கின்றன என்பதும் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. (நி-6)

## ஜப்பானிய நிதியமைச்சர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

இலங்கை மற்றும்கம்போடியா ஆகிய இரண்டு ஆசிய நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் ஜப்பானின் நிதியமைச்சர் சுனிச்சிச் சுசுகி பயணங்களை மேற்கொள்கிறார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் நான்கு நாள் சுற்றுப்பயண மாக, தாம், இலங்கை மற்றும் கம்போடியாவுக்கு செல்ல வுள்ளதாக ஜப்பானிய நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவரது இலங்கை விஜயத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துத் கடன் மறுசீரமைப்பு குறித்துத் அவர் விவாதிப்பார் என எதிர்பார்க்ப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம், ஜப்பான் மற்றும் ஏனைய கடன் வழங்குநர் குழு இலங்கையின்கடனைத் திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைத்தல் மற்றும் வட்டி விகிதங்களை க்குறைத்தல் என்பன தொடர் பில் அடிப்படை உடன்பாட்டை எட்டியிருந்தன.

இந்நிலையில் கடன் மறுசீரமைப்பு செயல்முறை நிலையான முன்னேற்றத்தை அடைவது முக்கியமானது என ஜப்பானிய நிதியமைச்சர் சுனிச்சி சுசுகி குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ஜோர்தானில் சிக்கியுள்ள 300 இலங்கையர்கள்

(ஜோர்டான்)

ஜோர்தானில் உள்ள சஹாப் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த சுமார் 350 இலங்கையர்கள் உணவு மற்றும் பொருட்கள் இன்றி சுமார் ஒன்றரை வருடங்களாக சம்பளம் வழங்கப் படாமையால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தூதரகத்திற்கு தகவல் தெரிவித்தும் விசாரணை நடத்தப்படவில்லை என கூறப்படுகிறது.

இதன்படி உயிர்ச்சேதம் ஏற்படுவதற்கு முன்னர் தம்மை இலங்கைக்கு அழைத்து வருமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

## விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்: நிஹால் தல்துவ

(கொழும்பு)

சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவினரை கைது செய்வதற்கான விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகை கால விசேட கடமைகளுக்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியமையினால் 3 நாட்களுக்கு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை குறைக்க நேரிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



கடந்த 25 ஆம் திகதி வரை போதைப்பொருளுடன் தொடர்புடைய 13,666 பேர் "யுக்திய" சுற்றிவளைப்பு நடவடிக்கை மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அவர்களில் 1,097 பேர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இடைநிறுத்தப்பட்டிருந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள்.மீள ஆரம்பிக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சகலரையும் சட்டத்திற்கு முன்பாக நிறுத்தும் வரை இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படும் என அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 28.11.2023 அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சுந்தரம் திருநாவுக்கரசு

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.12.2023) வியாழக்கிழமை நண் பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் : 1941.04.12
மறைவு : 2023.11.28

இங்ஙனம் : மகன்
குடும்பத்தினர் 077 543 5746
சண்முகம் வீதி, சாங்கத்தானை,
சாவகச்சேரி.

(18396)

# காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate


**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**077 468 3354, 071 173 3911**

(18398)

# 500 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை பட்டியலில் இணைந்த ரபாடா




தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் கசிகோ ரபாடா, சர்வதேச கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

செஞ்சுரியன் மைதானத்தில் இந்தியா, தென் ஆபிரிக்கா அணி களுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இப்போட்டியில் ககிசோ ரபாடா தனது மிரட்டலான பந்துவீச்சில் ஷ்ரேயாஸ், ஹோலி, அஸ்வின் மற்றும் ஷர்துல் தாக்கூர் ஆகியோரின் விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார்

இந்த நிலையில் காகிசோ ரபாடா சர்வதேச கிரிக்கெட்டில் 500 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனைப் பட்டியலில் இணைந்துள்ளார். இது வரை 6 தென் ஆபிரிக்க வீரர்கள் இந்த மைல் கல்லை எட்டிய நிலையில், 28 வயதாகும் ரபாடா 7ஆவது வீரராக இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஆப்கான் வீரர்கள் மூவர் ஐ.பி.எல் ஆடுவது சந்தேகம்

முஜீப் உர் ரகுமான், பசல் ஹக் பருக்கி, நவீன் உல் ஹக் ஆகியோருக்கு 2 ஆண்டு களுக்கு வெளிநாட்டு லீக் போட்டிகளில் பங்கேற்பதற்காக தடையில்லா சான்றிதழ் வழங்க ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.

இதற்கிடையே அவர்கள் தங்களை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் வருடாந்திர மத்திய ஒப்பந்தத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கோரினர். மேலும் வெளி நாட்டு லீக் போட்டிகளில் விளையாட அனுமதி கேட்டனர்.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை கூறும் போது, 3 வீரர்களும் மத்திய ஒப்பந்தத்தில் இருந்து விலக நினைப்பது அவர்கள் வணிக லீக் போட்டிகளில் விளையாடும் ஆர்வத்தை காட்டுகிறது.

ஆப்கானிஸ்தானுக்காக விளையாடுவதை விட அவர்களின் தனிப்பட்ட நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள் என தெரிவித்தது. மேலும் இந்த 3 வீரர்களும் ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவதில் சந்தேக நிலை ஏற்பட்டுள்ளது. (நி-6)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.01.2024 - 31.12.2024 வரையுள்ள காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான 2வது மீள்கேள்வி அறிவித்தல் - 2024**

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-28/12/2023 இல் இருந்து03/01/2024ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-04/01/2024 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-04/01/2024 காலை 10.15 மணிக்கு.
    வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், வாகனத்தரிப்பிடம், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 20/10/2023ஆம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. 20.10.2023ம் திகதிய கேள்வி அறிவித்தலின் நிபந்தனை இலக்கம்.10 இல் சந்தையின் அண்மையப்பகுதியில் இருந்து 1 கிலோமீற்றர் தூர அளவென்பது 500 மீற்றர் தூர அளவென இவ் அறிவித்தலின் மூலம் திருத்தப்படுகின்றது.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

2024 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை 2வது மீள்கேள்வி விபரம்

| தொ. இல | குத்தகை விபரம் | 2024 ஆம் ஆண்டு 2வது மீள்கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | **நெல்லியடி உப அலுவலகம்** | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை -(அங்காடி நீங்கலாக) | 13,059,700.00 | 130,597.00 | 1000.00 | - |
| 2 | கோயிற் சந்தை வாகனத் தரிப்பிட நிலையம் | 68,400.00 | 684.00 | 500.00 | - |
| 3 | நெல்லியடிச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 519,600.00 | 5,196.00 | 500.00 | 100.00 |
| | **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | - | | |
| 4 | அந்திரான் சந்தை | 119,400.00 | 1,194.00 | 500.00 | - |
| 5 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 687,800.00 | 6,878.00 | 500.00 | 100.00 |
| 6 | மண்டான் சந்தை | 45,600.00 | 456.00 | 500.00 | - |
| 7 | உடுப்பிட்டிச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 214,400.00 | 2,144.00 | 500.00 | 100.00 |
| 8 | சாண்டா சந்தை கோழிக்கடை | 70,800.00 | 708.00 | 500.00 | 100.00 |
| | **கட்டைவேலி உப அலுவலகம்** | | - | | |
| 9 | துன்னாலை வடக்கு சந்தை ஆட்டு இறைச்சிக்கடை | 56,600.00 | 566.00 | 500.00 | 100.00 |

**28/12/2023.**

செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13,897 ஏக்கர் பெரும்போக செய்கை கிளி.மாவட்டத்தில் அழிவடைந்துள்ளது

## மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக சுமார் 13,897 ஏக்கர் பெரும் போக நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக அறிக்கை இடப்பட்டுள்ளது என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக் களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெற்செய்கை அழிவு விபரங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக குறித்த தகவல்கள் திரட்டப்பட்டதாகவும் அந்த தகவல்களுக்கு அமைய 13,897 ஏக்கர் அழிவடைந்துள்ளதுடன் 4,461 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இராமநாதபுரம், அக்கராயன்குளம்,முழங்காவில், கண்டாவளை, பரந்தன்,பூநகரி, புளியம்பக்கணை, உருத்திரபுரம், பளை ஆகிய பத்து கமநல சேவை நிலையங்களின் கீழ் குறித்த அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த அழிவுகள் தொடர்பாக பரிசீலனை செய்யப்படவுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். (நி-6-315)

# தாய்லாந்து கொடியுடன் கரையொதுங்கிய தெப்பம்


(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்கரையில் நேற்று தாய்லாந்து கொடியுடன் கரையொதுங்கிய தெப்பம்.

கடும் காற்று வீசிவரும் நிலையில் கடலில் மர்ம பொருள் ஒன்று மிதந்தவாறு கடற்கரையை நோக்கி வருவதனை அப்பகுதி மக்கள் அவதானித்தனர்.

கரை யொதுங்கிய தெப்பத்தை கடற்படையினர் கரைக்கு இழுத்து வந்தனர்.

தகர பரல்கள் 'இரும்பு பட்டங்கள் மூலம் ஒன்றிணைக்கப்பட்டு அதன் மேல் அலங்கார குடில் ஒன்று சிதைவடைந்த நிலையில் கரை யொதுங்கியுள்ள தெப்பத்தில் தாய்லாந்து கொடியும் கட்டப்பட்டு இருந்தது. (நி-6-60)



# கிளிநொச்சிக் குளத்திலிருந்து குடிநீர் பெறுவது நிறுத்தம்?

## மாற்று வழிகளுக்கு அமைச்சர் பணிப்பு

(கிளிநொச்சி)

மாசுபடுத்தப்பட்டுள்ள கிளிநொச்சி குளத்திலிருந்து நீர் பெறுவதை தவிர்த்து மாற்று ஏற்பாட்டு முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் குடிநீர் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி குளத்திலிருந்து பழைய முறையைப் பயன்படுத்தி நீர் சுத்திகரிக்கப்பட்டு சுமார் 7000 இணைப்புகள் மூலம் மக்களிற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

குறித்த குளத்தில் கழிவுகள் கலக்கப்படுவதால் நீர் மாசுபட்டுள்ளது என குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது மிக பெரிய திட்டம் ஒன்றின் ஊடாக நவீன சுத்திகரிப்பு முறை மூலம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுகிறது.

அடுத்த வருடம் முதல் பகுதியில் அதன் மூலம் சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறியியலாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் விஜயத்தின் போது தான் பேசுவதாகவும் அதற்கான மாற்று முன்மொழி வுகளை தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு தெரிவித்தார். (நி-6)

# 4500 துப்பாக்கி ரவைகள் முல்லையில் மீட்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு வலைஞர் மடம் பகுதியில் உள்ள வயல் காணி ஒன்றில் ரி- 56 வகை துப்பாக்கி ரவைகள் 4500 நேற்று மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வயல் காணியில் காணி உரிமையாளர் மண்ணை அகழ்ந் தெடுக்கும் போது துப்பாக்கி ரவை பெட்டிகள் இருப்பதை அவதானித்துள்ளார்.

இது தொடர்பில் கடற்படை யினருக்கு தகவல் வழங்கப் பட்டதனையடுத்து முல்லைத்தீவு பொலிஸார் குறித்த சம்பவ இட த்திற்கு வருகைதந்து ரி-56 வகை துப்பாக்கி ரவைகள் அடங்கிய ஆறு பெட்டிகளில் 4500 துப்பாக்கி ரவைகள் மீட்க ப்பட்டன.

குறித்த துப்பாக்கி ரவைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-299)


# கேள்விப்பத்திரம் கோரல்

**யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**

**கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்.**

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தர கட்டிடக் கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கு இக் கடைத்தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத்துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு கடைத்தொகுதிகளை பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "கடைத்தொகுதிக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 10.01.2024 ஆம் திகதிக்கு முன் தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர்சபையின் முடிவே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து),**
**யாழ்ப்பாணம்.** (சி-8032) 28.12.2023


# இராசிபலன்

**28.12.2023**
**மார்கழி 12, வியாழக்கிழமை**
**பிரதமை காலை 6.58 மணிவரை**
**புநர்பூசம் பின்னிரவு 1.37 மணிவரை**

**சுபநேரம் -7.58-9.28 மணிவரை**
**இராகுகாலம்-1.58-3.28 மணிவரை**

**சந்திராஷ்டமம்**
**அனுசம் , கேட்டை**

**வளவன்**

**மேஷம்** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** பணப்புளக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆன்றோர் சந்திப்பு உண்டு.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும், கடமையில கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**விருச்சிகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்,வீண் செலவுகள் ஏற்படாமல் பார்ப்பது நல்லது வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ரோக பயமுண்டு

**கும்பம்** பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** எப்பிடி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.


**கன்னி** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**உண்மையான அன்பை சுமக்கும் இதயம் அடிக்கடி ஏமாறும் யாரையும் ஏமாற்றாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்-நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட 7 பேர் கைது

## 16 பவுண் நகைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேர் காங்கேசன் துறை குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் நடந்த களவுச் சம்பவத்தில் ஐந்தரை இலட்சம் ரூபாய் பணமும் 16 பவுண் நகைகளும் களவுபோன சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபர்களை பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இருவர் பிணையில் விடுவிக்கப் பட்டதோடு ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(நி-6-33-60)




# பாராட்டு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனின் சேவைநலன் பாராட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி கல்வி வலய அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (நி-6-30)

# போயாதினத்தில் சாராயம் விற்றவர் கைது

(யாழ்ப்பாணம்)

பௌர்ணமி விடுமுறை தினத்தில் அரச சாராயத்தை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிட மிருந்து 180 மில்லி மற்றும் 750 மில்லி மதுபானம் கொண்ட 102 போத்தல்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் யாழ். நகர்ப்பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து 36 வயதுடைய நபரே கைது செய்யப் பட்டுள்ளார். (நி-6-33)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், கை உழவு இயந்திரம் மற்றும் துைசைக்கிள்கள் என்பன எதிர்வரும் 2024.01.06 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# ஹெரோயினுடன் இருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பருத்தித்துறை நான்காம் குறுக்கு தெருப் பகுதியில் 40 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 27 வயதுடைய நபர் ஒருவரும் கலட்டிப் பகுதியில் 80 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருளுடன் 29 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மார்கழி இசைவிழா 2023

**காலம்: 28 வியாழக்கிழமை**

**நேரம்: மாலை 4.45**

**இடம்: யாழ்.கலாசார மத்திய நிலையம்**

## இரண்டாம் நாள் நிகழ்வுகள்

5.00pm-5.05pm
மங்கல விளக்கேற்றல்

5.05pm-5.15pm
தமிழ்த்தாய் வாழ்த்து
இசைப்பிரிவு மாணவர்கள். இந்தியா கோர்னர்.
நெறியாள்கை திருமதி-வாசஸ்பதி ரஜீந்திரன்

5.15pm-5.20pm
திருநிறை வழங்கல்
நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல்
இணைத்தலைவர் திரு.இ.இளங்கோவன்

5.20pm-6.20pm
யாழ்.மண்ணின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர
வித்துவான்களின் இசைச் சங்கமம்

6.20pm-6.45pm
"நிருத்தியார்ப்பாணம்"
தயாரிப்பு. நெறியாள்கை. நட்டுவாங்கம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை
4 ஆம் வருட மாணவர்கள்


6.45pm-7.15pm
விரலிசைகானம்
திருமதி.கவிதா வாமதேவன்

7.15pm-8.00 pm
ஈழத்தின் தமிழிசை இசையரங்கு
தவநாதன் றொபேட் குழுவினர்
8.00pm-8.30pm
அனுராகம் கவின் கலை நிலையம் வழங்கும்
"வீணாவர்ஷனம்" நெறியாழ்கை வெ.விஜயபாரதி

8.30pm-9.15pm
"பரதநாட்டிய நடன நிகழ்ச்சி"
தமிழ்நாட்டிலிருந்து
குரு.திருமதி.ஹேமலதா மகாலிங்கம்
அவர்களின் மாணவியர்கள்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 450 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 300 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1400 | 1200 |
| தக்காளி | 700 | 600. | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 180 | 150 |
| கோவா | 450 | 400 | 400 | 500 |
| கரட் | 400 | 500 | 550 | 700 |
| பூசணி | 160 | 180 | 150 | 200 |
| புடோல் | 320 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 220 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 550 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 400 | 350 | 450 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 650 | 650 | 500 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 550 | 500 | 650 | 700 |
| கத்தரிதம்புள்ள | 550 | 280 | 400 | 550 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 400 | 500 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 600 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங் கி | 220 | 200 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 30 | 50 | 80 |
| ஈரப்பிலா | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் கற்கைநெறியின் இணைப்பாளர் அருட்தந்தை பேராசிரியர் ஜே.சி. போல் றொகானின் நெறிப்படுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து வீழ்ந்த இரு மரங்கள் 8 வாகனங்கள் பலத்த சேதம்

## கண்டியில் சம்பவம்

(ஹற்றன்)



கண்டி, திலக் ரத்நாயக்க மாவத்தையில் இரண்டு பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததில், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 வாகனங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

நேற்று புதன்கிழமை காலை 11 மணியளவில் அடுத்தடுத்து இருந்த இந்த மரங்களே இவ்வாறு வீழ்ந்துள்ளன.

கனமழை காரணமாக இந்த மரங்களின் வேர்கள் அழுகிவிட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனால், அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகள், கார்கள், வான்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 8 வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளதுடன், காயமடைந்த இருவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)

# எமது தவறினாலே மின்வெட்டு ஏற்பட்டது

## மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அண்மையில் ஏற்பட்ட மின்வெட்டு தமது தவறினாலேயே ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னிலையில் விடயங்களை முன்வைத்த போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த விடயம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆணைக்குழு கூடவுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் மஞ்சுல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொத்மலை முதல் பியகம வரையிலான மின் விநியோகக் கட்டமைப்பில் மின்னல் தாக்கம் ஏற்பட்டமையினால், கடந்த 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மின்வெட்டு ஏற்பட்டது.

மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவர பல மணித்தியாலங்கள் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மீண்டும் ஆட்சி அதிகாரம் கிடைக்கும் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்த தேர்தலின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்வதே தமது எதிர்பார்ப்பு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிக்கு செல்வதோ அல்லது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமையை பெறுவதோ தமது எதிர்பார்ப்பு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரிந்திவெல பகுதியில் ஆரம்பமான கண்காட்சி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கட்சியில் இருந்து விலகியவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


போதைப்பொருளால் நாடு அழிந்து வரும் நிலையில், அதனை ஒழிப்பதற்காக தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ள விசேட நடவடிக்கையை தாம் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலின் ஊடாக தாம் மீண்டும் ஆட்சி வருவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது ஆட்சியில் வரிகளை நீக்குவதற்கு மாறாக மக்களுக்கு நியாயமான வரிகள், முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-6)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடமாட்டார்

## எதிர்க்கட்சி வெளியிட்ட தகவல்

(கொழும்பு)



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 16 மற்றும் ஒக்டோபர் 16 ஆம் திகதிகளுக்கு இடையில் நடைபெறும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக களமிறங்க மாட்டார்.

இதற்கு முன்னர் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வியை சந்தித்த அவர், 2016 இல், மற்றொரு இழப்பை எதிர்பார்த்து, பொது வேட்பாளரை பரிந்துரைத்தார். அந்த வெற்றியில் ஆட்சியைப் பிடித்தார்.

எவ்வாறாயினும் இந்த முறை அவர் அதிஷ்டத்தால் மட்டுமே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்காது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக தம்மிக்க பெரேரா தெரிவு செய்யப்பட்ட நிலையில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு எந்த கட்சியுடன் கீழ் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட முயற்சித்தாலும் நிச்சயம் தோல்வியை சந்திக்க நேரிடும்.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் ரணில் விக்கிரமசிங்க போன்ற வயதான அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

65 வயதிற்குட்பட்ட புதிய ஜனாதிபதியை நாடு தெரிவு செய்யும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணி வாகன விபத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

நெலுவ பகுதியிலிருந்து லங்காகம நோக்கி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற சிற்றூர்ந்து ஒன்று விபத்துத்க்குள்ளானதில் யுவதியொருவர் உயிரிழந்தார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த விபத்தில் மேலும் இரண்டு வெளிநாட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த மகிழுந்து ஒன்று குறித்த சிற்றூர்ந்துடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மகிழுந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நெலுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறைவடைய வாய்ப்பு

## பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ள நிலையில், பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறைவடையும் என பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தானிலிருந்து இந்த வாரம் பெருமளவு பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன், அடுத்த மாதம் சீனா மற்றும் நெதர்லாந்திலிருந்தும் பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதன்காரணமாக பெரிய வெங்காயத்தின் விலை வெகு விரைவில் குறைவடையும் என பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய வெங்காய தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில், பாகிஸ்தான், சீனா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமை 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகள் விற்பனை செய்வதாகவும் இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.

350 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயமே, இவ்வாறு 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகிறது.

பெரிய வெங்காயத்தின் சில்லறை விலையாக 405 ரூபா முதல் 420 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மற்றுமொரு கைதிக்கு மூளைக்காய்ச்சல் உறுதி

(மாத்தறை)

மாத்தறை சிறைச்சாலையில் மேலும் ஒரு கைதிக்கு மூளைக்காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் திடீரென சுகவீனமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட கைதிகளின் உயிரியல் மாதிரிகள் பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட நிலையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை சிறைச்சாலை கைதிகளில் ஒருவருக்கு மாத்திரம் மூளைக்காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.


முன்னதாக குறித்த காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கைதி ஒருவர் இறந்துள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், கைதிகளிடையே பரவி வரும் மூளைக் காய்ச்சல் குறித்து பொது மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## டில்லியில் இஸ்ரேல் தூதரகம் அருகே குண்டு வெடிப்பு; தீவிர விசாரணை



(டில்லி)

புதுடில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்கு அருகே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

நடந்த வெடிவிபத்தில் தூதரக ஊழியர்கள் எவருக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இஸ்ரேலிய தூதரக செய்தித் தொடர்பாளர் கைநிர், இஸ்ரேல் தூதரகத்திற்கு அருகாமையில் மாலை 5.48 மணியளவில் குண்டுவெடிப்பு ஏற்பட்டது என்பதை நாங்கள் உறுதிப்படுத்த முடியும். டில்லி பொலிஸார் மற்றும் பாதுகாப்புக்குழுவினர் நிலைமையை இன்னும் ஆராய்ந்து வருகின்றனர் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தூதரகத்திலிருந்து சில மீற்றர் தொலைவில் உள்ள இடத்தில், இஸ்ரேலிய தூதருக்கு ஒரு கடிதத்தை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். மேலும் கடிதம் சுற்றப்பட்ட கொடியையும் கண்டெடுத்துள்ளனர்.

இதையடுத்து அந்த கடிதத்தை பொலிஸார் கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இஸ்ரேல் தூதரகம் மற்றும் அதனை சுற்றிய இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு அருகில் உள்ள சிசிடிவி கமராவில் இரண்டு சந்தேக நபர்கள் சிக்கியுள்ளதோடு, அவர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்து அவர்களைக் கைது செய்வதற்கான முயற்சிகளை டில்லி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

## இந்தியாவின் அசாமில் நிலநடுக்கம் தொடர் அதிர்வுகளால் அச்சம்

(டில்லி)

இந்திய மாநிலம் அசாமில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அசாம் மாநிலம் - தேஸ்பூரில் நேற்று அதிகாலை 5.55 மணிக்கு இந்நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கம் தேஸ்பூருக்கு கிழக்கே 42 கி.மீ தொலைவில் 20 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலமான அசாமில் கடந்த நவம்பர் 8ஆம் திகதி 4.1 ரிக்டர் அளவிலும் 26 ஆம் திகதி 3.0 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று ரிக்டர் அளவுகோலில் 3.4 ஆக நிலநடுக்கமானது பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் பொருட்சேதமோ அல்லது உயிர்சேதமோ ஏற்பட்டதாக எந்தவித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

இந்த மாத தொடக்கத்தில், அசாமின் கௌகாத்தியில் 3.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சீனாவில் இருந்து தாய்வானை பிரிக்க முடியாது - ஜீ ஜின்பிங்



தாய்வானை சீனாவில் இருந்து யாராலும் பிரிக்க முடியாது என அந்நாட்டு ஜனாதிபதி ஜீ ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவின் முன்னாள் தலைவர் மாவோ சேதுங்கின் 130 ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் கருத்தரங்கில், கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், தாய்நாடு மீண்டும் இணைக்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாமல் மீண்டும்ஒன்றிணைக்கப்படும்என்றும் அவர் தெரிவித்தார்.

2025 இல் அல்லது 2027 இல் தாய்வானைக் கைப்பற்ற ஜீ திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைவர்களின் பொதுக் கணிப்புகளையும் சீனத் தலைவர் குறிப்பிட்டார். (நி-6)

### சட்டவிரோத இணைய நடவடிக்கை

## வடகொரியாவின் உளவுத் துறைதலைவர் மீது தடையை அறிவித்தது தென்கொரியா

(சியோல்)

அணு ஆயுதங்கள் மற்றும் வழக்கமான ஏவுகணைத் திட்டங்களுக்கு நிதியளிப்பதாக நம்பப்படும் சட்டவிரோத இணைய நடவடிக்கைகளுக்காக வட கொரியாவின் உளவுத் துறை தலைவர் மற்றும் ஏழு வட கொரியர்கள் மீது தென் கொரியா தடைகளை விதித்துள்ளது.


வட கொரியாவின் உளவுத் துறை தலைவர் சட்டவிரோத இணைய நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப திருட்டு மூலம் வெளிநாட்டு நாணயத்தை சம்பாதித்ததாக சியோலின் வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவரது நடவடிக்கைகள் வடகொரிய ஆட்சிக்கு வருவாய் ஈட்டுவதற்கும் அதன் அணுசக்தி மற்றும் ஏவுகணை நடவடிக்கைகளுக்கு நிதி பெறுவதற்கும் பங்களித்தது என்றும் தென்கொரிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வட கொரியா வெளிநாட்டு விண்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களை குறிவைத்து, கிரிப்டோகரன்சி சொத்துக்களை பதிவு செய்ய அதிக அதிநவீன நுட்பங்களைப் பயன்படுத்துகிறது என இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருந்தது.

கிம் ஜாங் உன்னின் தலைமையில் பியோங்யாங் அணுகுண்டு மற்றும் கண்டம்விட்டுகண்டம்பாயும் ஏவுகணை சோதனைகளுக்காக உலக நாடுகளின் தடைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் தென் கொரியாவும் தடைகளை அறிவித்துள்ளது. (நி-6)

## 50 ஜோடிகளுக்கு ஒரு நேரத்தில் திருமணம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலை நகரான காபூலில், 50 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் நடைபெற்றுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிலவிவரும் பொருளாதார மந்த நிலையைகருத்தில்கொண்டே தொண்டு நிறுவனம் ஒன்றினால் குறித்த திருமண வைபவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த தொண்டு நிறுவனத்தினால் புதுமணத் தம்பதிகளுக்கு தரைவிரிப்பு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு சென்னையில் பலப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு

(டில்லி)

ஆங்கில புத்தாண்டு பிறப்பிற்கு இருப்பது இன்னும் ஐந்து நாட்களே. இதனால் சுற்றிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள், விடுதிகள் என்பன கொண்டாட்டங்களுக்கு தயாராகி வருகின்றன.

மெரினா கடற்கரை , பெசன் நகர் கடற்கரை என்பனவற்றுக்கு அதிகளவான மக்கள் வருகை தருவார்கள் என்ற காரணத்தினால் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பல பாதுகாப்பு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகர பொலிஸாரினால் 31 ஆம் திகதி இரவு 20.000 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.


மேலும் பெண்கள், சிறுவர்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர். ட்ரோன் மூலமும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# எம்மீது கைவைத்தால் இஸ்ரேல் தரைமட்டமாகும்

## ஈரான் கடும் எச்சரிக்கை



(டெஹ்ரான்)

இஸ்ரேல், ஈரானிய பிரதேசத்தை ஆக்கிரமித்தால் டெல் அவிவை ஈரான் தரைமட்டமாக்கும் என்று ஈரானிய புரட்சிகர காவலர்களின் குட்ஸ் படையின் தளபதியின் உயர்மட்ட ஆலோசகர் இராஜ் மஸ்ஜிதி நேற்று முன் தினம் எச்சரிக்கை விடுத்தார்.



"காசா போரில் ஈரானின் தலையீடு தேவையில்லை, பாலஸ்தீனிய எதிர்ப்பே அவர்களின் எதிரியாகும்.

ஆனால் ஒரு நாள் அவர்கள் இஸ்லாமிய குடியரசை அணுகினால், அன்று ஈரான் என்ன செய்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

அத்துடன் எதிர்ப்பை எதிர்கொள்வதில் இஸ்ரேல் சக்தியற்றது என்றும், ஒக்டோபர் 7 அன்று அல்-அக்ஸா வெள்ள இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட தோல்வியை அது என்ன செய்தாலும் மீட்டெடுக்காது என்றும் கூறினார்.

ஈரானின் ஆயுதப் படைத் தலைவர் முகமது பாகேரி ,சிரியப்பகுதியில் மெசவியைக் கொன்றதன் முலம் இஸ்ரேலியர்கள் ஒரு முலோபாயத்தவறைச் செய்து விட்டனர் என்று தெரிவித்தார். (நி-6)

# உக்ரைன் அதிரடி தாக்குதல் ரஷ்யாவின் கப்பல் அழிப்பு

(கீவ்)

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவில் உள்ள துறைமுகத்தில் உக்ரைன் விமானப்படை நடத்திய வான் வெளித்தாக்குதலில் ரஷ்ய தரையிறங்கு கப்பல் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில், தனது போர்க்கப்பல் ஒன்று சேதமடைந்ததை ரஷ்யா உறுதிப்படுத்தியுள்ளது.

கிரிமியாவில் உள்ள பியோடொசியா என்ற இடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.


நோவோசெர்காஸ்க் என்ற பெரிய கப்பலை உக்ரைன் விமானம் ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்கிவிட்டு தப்பிவிட்டதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் குறித்து உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி சமூக ஊடகங்களில் அந்தக் கப்பல் இப்போது "ரஷ்ய நீருக்கடியில் கருங்கடல் கடற்படையில்" சேர்ந்துள்ளது என்று கேலி செய்தார். தாக்குதலினால் ஏற்பட்ட தீ கட்டுப்படுத்தப்பட்ட பிறகு துறைமுகத்தில் வழக்கமான போக்கு வரத்து நடவடிக்கைகள் தொடர்ந்து இயங்கியதாக கூறப்படுகிறது. (நி-6)



# எதிர்வரும் நாட்களில் போர் விரிவுபடுத்தப்படும்

## நெதன்யாகு திட்டவட்டம்



(ஜெருசலேம்)

அடுத்து வரும் நாட்களில் போரை விரிவு படுத்தவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.


வடக்கு காசாவில் இஸ்ரேலிய துருப்புக்களை பார்வையிட்ட பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹமாஸ் தரப்பினர் முழுமையாக அழிக்கப்படும் வரையில் காசா வில் போர் தொடரும்.

இதேவேளை அமெரிக்கா மற்றும் ஈரானுடன் இணைந்த படைகள் மீண்டும் தாக்குதல்களை நடத்தி வருவதால் மோதல் மேலும் வலுவடையும்.

ஆகவே எதிர்வரும் நாட்களில் சண்டையை விரிவுபடுத்த உள்ளதாகவும் இது ஒரு நீண்ட போராக இருக்கும் என்றும் அது தற்போது முடிவடையும் அளவில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### உத்திரம் 2,3,4 ஆம் பாதம் நல்ல நேரம் வந்தாச்சு

ஆத்மகாரகன் என்று கூறப்படும் சூரிய பகவான் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு சூரியனே ராசிநாதனாகவும் 2,3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வித்யாகாரகனான புதன் ராசிநாதனாகவும் உள்ளனர்.

உங்கள் நட்சத்திர நாதனுக்கு சனி பகையானவர் என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை வழங்கிடக் கூடியவராகிறார். உத்திரம் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இதனால் 2,3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு அதிர்ஷ்டகரமான பலன்களை வழங்குவார். இக்காலம் பிரபல யோககாலமாக இருக்கும். பல நன்மைகள் உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியங்களில் வெற்றி ஏற்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். எதிர்ப்பு இல்ல மல் போகும். எதிரிகளை அடக்கி வெற்றி பெற முடியும். அபார ஆற்றல் உண்டாகும்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19.2024 வரையிலும் நவ 4, 2024 - பெப் 27, 2025 வரையிலும் அஸ்தமன வக்கிர காலங்களிலும் 4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும் நன்மையான பலன்களை வழங்குவார். சங்கடங்கள் விலகும். நெருக்கடிகள் இல்லாமல் போகும். முயற்சி வெற்றியாகும். 2,3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு இக்காலம் முழுமையும் யோகத்தை வழங்குவார். நினைத்ததை வெற்றி பெறும் நிலையை உண்டாக்குவார். செல்வாக்கை உயர்த்துவார். வழக்குகளில் சாதகமான நிலையை ஏற்படுத்துவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் வாழ்வில் தடுமாற்றம் ஏற்படும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு இ பறியாகும். ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும், கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில், 2,3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு இக்காலம் யோககாலமாக இருக்கும். இதுவரை இருந்த சங்கடங்கள் எல்லாம் விலக ஆரம்பிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். அந்தஸ்து உயரும். வழக்குகளில் வெற்றி ஏற்படும். உடலில் இருந்த பாதிப்புகள் விலகும். சுறுசுறுப் பாக செயற்பட்டு நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை 1 ஆம் பாதத்தினருக்கு பாக்ய ஸ்தானத்திலும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு அஷ்டமஸ்தானத்திலும் மே 1.2024 - மே 13.2025 வரை 1 ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு பாக்ய ஸ்தானத்திலும் மே 14.2025 முதல் 1 ஆம் பாதத்தினருக்கு லாப ஸ்தானத்திலும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு ஜீவன ஸ்தானத்திலும் குருபகவான் சஞ்சரிப்பார். 2,3,4 ஆம் பாதத்தினருக்கு மே 1.2024 - மே 13.2025 காலத்தில் யோகமான பலன்களை வழங்குவார். அதிர்ஷ்டகரமான நிலையை உருவாக்குவார். சங்கடங்களை எல்லாம் நீக்குவதோடு பொன்,பொருள்,செல்வாக்கு என்று உங்கள் வாழ்க்கையை வளமாக்குவார்.

**பொதுப்பலன்**

இந்த சனிப் பெயர்ச்சி காலத்தில் 1 ஆம் பாதத்தினருக்கு குருபகவானின் சஞ்சாரமும் 2,3,4 ஆம் பாதத்தினருக்கு சனிபகவானின் சஞ்சாரமும் மிகப்பெரிய யோகத்தை வழங்கும். இதுவரை இருந்த நெருக்கடிகள் விலகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் எல்லாம் வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பொருளாதார நிலை உயரும். அரசு ஊழியர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள் செல்வாக்கு உயரும். எண்ணியதை நிறைவேற்றிக் கொள்ளும் காலமாக இருக்கும்.

பரிகாரம் சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தானம் செய்து தீபமேற்ற நன்மை அதிகரிக்கும்.

### அஸ்தம் செல்வாக்கு உயரும்

மனக்காரகன் எனக் கூறப்படும் சந்திர பகவான், வித்யாகாரகனான புதனின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு டிச.20.2023 முதல் உங்கள் ராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான். கோச்சார ரீதியாக ஒவ்வொரு கிரகமும் அவர்கள் எந்த இடத்தில் சஞ்சரிக்கிறார்களோ அந்த இடத்திற்குரிய பலன்களை வழங்கிடக் கூடியவர்கள் ஆகிறார்கள்.




## 20.12.2023-06.03.2026

சனிபகவான் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது உங்கள் ஆற்றலை அதிகரிக்க வைப்பார். எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றியை உண்டாக்குவார். எதிரிகளை இருக்கும் இடம் தெரியாமல் ஓட வைப்பார். கடந்த காலத்தில் இருந்த சங்கடங்களை யெல்லாம் விலக்கி வைத்து பொருளாதாரத்தில் உயர்வையும் காரியத்தில் அனுகூலத்தையும் தொழிலில் வளர்ச்சியையும் வழங்குவார். ஆரோக்கியத்தில் முன்னேற்றத்தையும் வழக்குகளில் வெற்றிகளையும் ஏற்படுத்துவார்.

**அதிர்ஷ்ட காலம்**

அவிட்டம் நட்சத்திரத்தில் சனி பகவான் டிச 20.2023 - பெப் 15.2024 வரை சஞ்சரிக்கும் காலத்திலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் மார்ச் 29.2025 - ஜூலை 2.2025 மற்றும் நவ 17.2025 - மார்ச் 6.2026 காலத்தில் நீங்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். இக்காலத்தில் அதிகபட்சமான லாபத்தை அடைய முடியும். உங்கள் கௌரவம்,செல்வாக்கு,அந்தஸ்து யாவும் அதிகரிக்கும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில், மனதில் குழப்பம் அதிகரிக்கும். முயற்சிகளில் தடுமாற்றம் ஏற்படும். நட்புகளால் சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும். வாழ்க்கைத் துணையுடன் பிரச்சினைகள் தோன்றும். ஏப் 26.2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில், அதுவரை இருந்த சங்கடங்கள் ஒவ்வொன்றாக விலக ஆரம்பிக்கும். துணிச்சலாக செயற்படுவீர்கள். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். வழக்குகளில் சாதகம் தோன்றும். உடல்நிலை சீராகும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30.2024 வரை அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால், சங்கடங்கள் அதிகரிக்கும். பொருளாதார நெருக்கடி உண்டாகும். நினைத்ததை நடத்திக் கொள்ள முடியாமல் போகும். மனதில் ஒரு குறை இருந்து கொண்டே இருக்கும். மே 1.2024 - மே 13.2025 இல் பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் உங்கள் நிலையில் முன்னேற்றம் தோன்றும். செல்வாக்கு உயரும். பட்டம் பதவி என்ற உங்கள் ஆசை நிறைவேறும். சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். மே 14, 2025 முதல் 10 ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் குருவால் செய்து வரும் தொழிலில் நெருக்கடிகளும் பார்த்து வரும் உத்தியோகத்தில் பிரச்சினைகளும் தோன்றும். மனதில் சங்கடங்கள் அதிகரிக்கும். வருமானத்தில் தடைகள் உண்டாகும்.

**தொழில்**

தொழிலில் இருந்த சங்கடம் விலகும். திட்டமிட்டு செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் வெற்றியாகும். அரசு வழியில் எதிர்பார்த்த அனுமதி கிடைக்கும். பத்திர எழுத்தர்கள், கலைஞர்கள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், வெள்ளி, ஜவுளி, வழக்கறிஞர் தொழில் மேன்மையாகும்.

பரிகாரம் விநாயகருக்கு அருகம்புல், துர்கைக்கு குங்குமம் சாத்தி வழிபட வளம் உண்டாகும்.

### சித்திரை 1, 2 ஆம் பாதம் நெருக்கடி விலகும்

சகோதரகாரனான செவ்வாயின் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் 1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வித்யாகாரகனான புதன் ராசிநாதனா கவும் 3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு களத்திரக்காரகனான 3 சுக்கிரன் ராசிநாதனாகவும் உள்ளனர்.

சித்திரை 1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு சனி பகவான் 6 ஆம் இடத்திலும் 3,4 ஆம் பாதத்தினருக்கு 5 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு சமூகத்தில் செல்வாக்கையும் முயற்சிகளில் வெற்றிகளையும் பகைவர்களை வீழ்த்தும் வலிமையையும் பணவரவையும் நினைத்ததை நடத்தும் ஆற்றலையும் வழங்குவார்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16.2024 - ஜூன் 19.2024 வரையிலும் நவ 4.2024 - பெப் 27.2025 வரையிலும் சனி பகவான் தாரா பலத்தால் 4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கும் யோகபலன்களை வழங்குவார். முயற்சிகளில் வெற்றியை உண்டாக்குவார். சங்கடங்களை விரட்டுவார். 1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு யோகம், போகத்தை அதிகரிப்பார். தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் தருவார். போட்டியாளர்களை எல்லாம் பின்வாங்க வைப்பார். வழக்குகளில் வெற்றியை உண்டாக்குவார். செயல்களை லாபமாக்குவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வீண் பிரச்சினைகள் உண்டாகும். குடும்பத்திற்குள் நிம்மதியற்ற நிலை ஏற்படும். புதிய நட்புகளால் சிலர் அவமானத்திற்கு ஆளாக நேரும். பொருள் இழப்பும் உண்டாகும். ஏப் 26.2025 இற்கு பிறகு இந்த நிலை மாறும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். ஆரோக்கியம் மேம்படும்.

**குரு சஞ்சாரம்**

1,2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஏப் 30.2024 வரை அஷ்டம ஸ்தானத் திலும் மே 1.2024 - மே 13.2025 வரை பாக்ய ஸ்தானத்திலும் மே 14.2025 முதல் ஜீவன ஸ்தானத்திலும் குருபக வான் சஞ்சரிப்பார். பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில், யோகத்தை உண்டாக்குவார். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும். வேலை தேடி வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். புதிய வீடு கட்டி குடியேற வைப்பார். அரசியல்வாதிகளின் செல்வாக்கை உயர்த்துவார். புதிய பதவி பொறுப்புகள் வந்து சேரும். அஷ்டம, ஜீவன ஸ்தான காலங்களில் நெருக்கடிகள் உண்டா கும்.

**பொதுப்பலன்**

இக்காலத்தில் உறுதியாக இருந்து நினைத்ததை சாதிப்பீர்கள். சூழ்நிலைகளும் உங்களுக்கு சாதகமாக அமையும். தொழில், உத்தியோகம் போன்றவற்றில் எண்ணம் நிறைவேறும். செயல்களில் விவேகம் இருக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். தைரிய மாக செயற்பட்டு வரு வாயை அதிகரிப்பீர்கள்.

**தொழில்**

தொழிலில் எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள். போட்டியாளர்கள் விலகுவர். புதிய முதலீடு ஆதாயம் தரும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். அரசு வழியில் இருந்த தடைகள் விலகும். புதிய தொழிற்சாலை, தொழில் தொடங்க நினைத்தவர்களின் எண்ணம் நிறைவேறும்.

**பணியாளர்கள்**

உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் விலக ஆரம்பிக்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு சாதகமாக இருப்பார்கள். சக ஊழியர்களும் ஆதரவு புரிவர். தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் நிலை உயரும். முதலாளியின் பாராட்டிற்கு ஆளாவீர்கள். திறமை மதிக்கப்படும். ஊதியம் உயரும்.

**கல்வி**

படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதால் தேர்வில் நீங்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெற முடியும். ஒரு சிலர் கல்வியில் அலட்சியமாக இக்காலத்தில் இருப்பீர்கள். எதிர்காலத்தை நினைத்து, ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்று செயற்படுவதால் தேர்வில் வெற்றி உண்டாகும். ஒரு சிலர் வெளிமாநிலம், வெளிநாடு என்று மேற்கல்விக்காக செல்வீர்கள்.

**உடல்நிலை**

தொடர்ந்து இருந்து வந்த நோய்களில் இருந்து இக்காலத்தில் நிவாரணம் கிடைக்கும். பரம்பரை நோய், தொற்று நோய்களால் சங்கடம் உண்டாகும் என்றாலும் அவை மருத்துவ சிகிச்சையால் குணமாகும். பெரிய அளவில் பயமுறுத்திய நோய்கள் இக்காலத்தில் நவீன சிகிச்சையால் குறைய ஆரம்பிக்கும். நடைபயிற்சி, யோகா போன்றவற்றால் நோய்கள் கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**குடும்பம்**


பெரியோரின் ஆதரவு இக்காலத்தில் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாட்டில் சிலர் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வரவுகளால் சங்கடம் விலக ஆரம்பிக்கும். துணிந்து செயறபட்டு குடும்பத்தில் இருந்த பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவீர்கள். உங்கள் வசதிக்கேற்ப வீடு கட்டி அதில் குடியேறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். பிள்ளைகள் விருப்பப்படி அவர்களுடைய மேற்கல்விக்காக வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

பரிகாரம் குலதெய்வ வழிபாட்டால் உங்கள் குறை தீரும் நன்மை அதிகரிக்கும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியில் இடம்பெற்ற மருத்துவ முகாம்



(முறிகண்டி)
யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள "சரசவி பௌத்த" விகாரையில் மருத்துவ முகாம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது

யாழ். பல்கலைக் கழக பௌத்த விகாரை மற்றும் களணி நாகாநந்தா சர்வதேச பௌத்த பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய மருத்துவ முகாமில் மலேசியாவிலிருந்து வருகை தந்த வைத்தியர் குழுவினரின் வைத்திய ஆலோசனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டது. இதில் அக்கு பஞ்சர் சிகிச்சையும் இடம் பெற்றுள்ளது. இதன் போது 500 பேருக்கான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள், 200 பேருக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (நி-6-100-316)

# வவுனியாவில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கை

## 10 சாரதிகளுக்கு தண்டம் விதிப்பு



(குருமன்காடு)
புத்தாண்டை முன்னிட்டு வவுனியா போக்குவரத்து பொலிஸார் நேற்று விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

புத்தாண்டு காலத்தில் விபத்துக்களை கட்டுப்படுத்தவும், போதைப் பாவனையை தடுக்கும் வகையிலும் வவுனியா போக்குவரத்து பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது, 10 சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், ஒரு சாரதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (நி-6-250)




# வவு. விபத்துக்குள்ளான 2 மோட்டார் சைக்கிள்கள்

## ஒருவர் படுகாயம்

(குருமன்காடு)
வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் முதியவரொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்டானிச்சூர் பாடசாலையினை அண்மித்த பகுதியில் கடந்த திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா நகரிலிருந்து மன்னார் வீதியூடாக முதியவரொருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் மறுபக்கம் மாற முற்பட்ட சமயத்தில் அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தில் முதியவர் படுகாயமடைந்த நிலையில் மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமையுடன் விபத்துக்குள்ளான இரு மோட்டார் சைக்கிளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மற்றும் நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-250)






நிகரி




சகிர்




ஆராத்தியா




நந்தவனம்




வந்தனா




சாருஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெ[illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 365





இவனை நான் பார்க்கப் போன இடத்தில் ஒரு பூனை என் கை கால்களைப் பிறாண்டி விட்டது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அவனுடைய உடம்பில் ஏற்பட்டிருந்த இரத்தக் காயங்களைப் பார்த்துச் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஒரு பூனையா உன்னை இந்தப் பாடுபடுத்திவிட்டது! நல்லவேளை! காட்டுப் பாதையில் போவதற்கு இந்த வீரன் உனக்கு வழித்துணையாகக் கிடைத்திருக்கிறான்."

"சேனாதிபதி! எனக்கு வழித்துணை தேவையில்லை. என்னுடைய கைத்தடியே போதுமானது. அதை எடுத்துக் கொள்ளாமல் நான் இவனைப் பார்க்கப் போனதுதான் பிசகாய்ப் போய்விட்டது."

"அப்படியானால் இவனுக்கு நீ வழித்துணையாக இரு! புறப்படுவதற்கு முன்னால் இவனுக்குச் சரியாகச் சாப்பாடு பண்ணி வைத்துவிட்டு அப்புறம் கிளம்பு! தம்பி! இப்போது இலங்கையில் சாப்பாட்டு வசதி கொஞ்சம் குறைவு. இங்கேயுள்ள ஏரி குளங்களையெல்லாம் மகிந்தனுடைய சேனா வீரர்கள் கரையை உடைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அதனால் விவசாயம் சரியாக நடப்பதில்லை. விவசாயம் செய்வதற்கு ஆட்களும் இல்லை. இந்த நாட்டு மக்களே பட்டினி கிடக்கிறார்கள். நம் வீரர்களுக்கு எப்படி உணவு கிடைக்கும்? நம்முடைய நாட்டிலிருந்தும் அரிசி போதிய அளவு அனுப்பி வைப்பதில்லை."

இரா போஜனத்துக்கு ஒரு பூனையை அனுப்பி வைத்தார்கள். அதை நான் சாப்பிட எண்ணியிருக்கையில் இந்த வீர வைஷ்ணவரைக் கண்டதும் கோபம் வந்துவிட்டது. இவரை நகத்தினால் பிறாண்டிவிட்டு அது ஓடிவிட்டது!" என்றான்.

சேனாதிபதி "ஓகோ! இந்தப் பிள்ளை ரொம்ப வேடிக்கைக்காரப் பையனாயிருக்கிறான்! திருமலை! இவன் சொல்வது உண்மையா?" என்று கேட்டார்.

"சேனாதிபதி! இவன் முன்னோர்கள் கவிஞர்களாம். ஆகையால் இவனிடமும் கற்பனா சக்தி அதிகம் இருக்கிறது. மற்றப்படி இவன் சொல்வது உண்மைதான்.

"சேனாதிபதி! அது எனக்குத் தெரிந்த விஷயந்தான். பழையாறை வீரப் படைவீடுகளின் வழியாக இளைய பிராட்டி சென்றபோது பெண்டுகள் அவரிடம் முறையிட்டதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். 'இலங்கையில் எங்கள் கணவன்மார்களும் பிள்ளைகளும் பட்டினி கிடக்கிறார்களாமே!' என்று முறையிட்டார்கள்."

"ஓகோ! இது அங்கேயும் தெரிந்து முறையிட்டார்களோ? நல்லது, நல்லது! அதற்கு இளைய பிராட்டி என்ன மறுமொழி சொன்னார்கள்?"

"சேனாதிபதி பெரிய வேளார் இலங்கையில் இருக்கும் வரையில் நம் வீரர்களைப் பட்டினியால் சாகவிட மாட்டார் நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொன்னார்."

"ஆகா! இளைய பிராட்டி அவ்விதம் சொன்னாரா? உலகத்தில் எத்தனையோ இராஜ குலங்களில் எவ்வளவோ புகழ் பெற்ற கன்னிகைகள் பிறந்ததுண்டு. ஆனால் எங்கள் இளைய பிராட்டிக்கு இணையானவர் வேறு யாரும் இல்லை."

"அடுத்தபடியாகச் சொல்லக் கூடிய இளவரசி ஒருவர் உண்டு, சேநாதிபதி!"

"அது யார், தம்பி?"

"கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிதான்!"

"ஆகா! இந்தப் பிள்ளை ரொம்பப் பொல்லாதவன். இவனுடைய கற்பனாசக்தி என்னையே மயக்கிவிடும் போலிருக்கிறது. தம்பி! பழையாறையில் எங்கள் குலவிளக்கை நீ பார்த்தாயா?"

"பார்த்தேன், ஐயா! இளைய பிராட்டியுடன் இணை பிரியாமல் இருந்து வருகிறவரை எப்படிப் பார்க்காமல் இருக்கமுடியும்? வைத்தியர் வீட்டிலிருந்து வழி அனுப்ப இரண்டு பேருமாகத்தான் யானைமீது ஏறி வந்தார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முத்திரை மோதிரத்தின் மகிமை

(நேற்றைய தொடர்ச்சி..)

"யாரிடம் கதை விடுகிறாய்? அக்பர் நீதான் என்றால் உன் முத்திரை மோதிரம் எங்கே?" என்று பீர்பால் வம்பு செய்தார்.

"என்னிடம் முத்திரை மோதிரம் இருக்கிறது. ஆனால், அதை உன்னிடம் நான் ஏன் காட்ட வேண்டும்?" என்று அக்பர் கேட்டார்.

"இல்லையானால் நீ சொல்வதை எப்படி நம்புவது? நானும் உன்னைப் போல் பிச்சைக்காரன்! அந்த உரிமையில் கேட்கிறேன்" என்றார் பீர்பால்.

"சந்தேகமிருந்தால் இதே பார்!" என்று முத்திரை மோதிரத்தை தன் விரலில் இருந்து கழற்றி அக்பர் காட்டினார்.

"அது உண்மையா இல்லை போலியா கொடு, பார்க்கலாம்" என்று அதை சோதிப்பவர் போல் பீர்பால் அக்பரிடமிருந்து மோதிரத்தை வாங்கிக்



கொண்டார்.

"அட! நிஜமாகவே இது சக்ரவர்த்தியின் முத்திரை மோதிரம்தான்! ஆனால், இது உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று பீர்பால் ஆச்சரியப்படுபவர் போல் நடித்தார். "முட்டாளே! நான்தான் அக்பர் என்று சொல்கிறேனே! என்னிடமில்லாமல் வேறு யாரிடம் இது இருக்கும்?" என்று அக்பர் சீறிவிழ, இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட, அங்கு சில காவல் வீரர்கள் வந்தனர்.

"இவனைப் பிடித்துச் செல்லுங்கள்! இவன் ஒரு திருடன்!" என்று பீர்பால் கூச்சலிட அவர்கள் அக்பரைப் பிடிக்க வர, "முட்டாள்களா! நான்தான் சக்ரவர்த்தி!" என்று அக்பர் கூச்சலிட்டார்.

"அவன் பொய் சொல்கிறான். நான்தான் சக்ரவர்த்தி!" என்று சொல்லி பீர்பால் முத்திரை மோதிரத்தைக் காட்ட, அவர்கள் அக்பரைக் கைது செய்ய முயன்றனர். "சரி சரி! அவனை விட்டுவிடுங்கள்" என்று பீர்பால் கூற அவர்கள் பீர்பாலுக்கு சலாம் செய்துவிட்டுச் சென்றனர்.

மறுநாள் அரண்மனையில் அக்பரைத் தனியாக சந்தித்த பீர்பால், "பிரபு! நேற்று உங்கள் மோதிரத்தைத் தொலைத்து விட்டீர்களா?" என்று கேட்க, அக்பர் 'ஆம்' என்று தலை அசைத்தார்.

"இதே?, உங்களுடைய மோதிரம்!" என்று பீர்பால் மோதிரத்தை அக்பரிடம் கொடுத்தார். உடனே நேற்றிரவு தான் மாறுவேடத்திலிருந்த போது தன்னுடன் தகராறு செய்து அவமானப்படுத்தியது பீர்பால்தான் என்று தெரியவர, அக்பர் கோபத்தில் துடித்தார்.

உடனே பீரபால், "பிரபு! தயவு செய்து கோபப்படாதீர்கள்! உங்களை அவமானப்படுத்துவது என் நோக்கமல்ல! சில நாள்களுக்கு முன் நமக்குள் நடந்த விவாதம் நினைவிருக்கிறதா? என்னுடைய பெருமை, கௌரவம் ஆகியவை என் திறமையினால் பெற்றவை என்றும், உங்களிடம் அதிகாரச் சின்னங்களான மகுடமும், மோதிரமும் இருக்கும் வரைதான் உங்கள் அதிகாரம் செல்லுமென்றும் கூறினேன். அதை நீங்கள் நிரூபித்துக் காட்டச் சொன்னீர்கள், அதைத்தான் நான் நேற்று நிரூபித்துக் காட்டினேன். உங்களிடம் உள்ள முத்திரை மோதிரத்திற்குள்ள சக்தி உங்களுக்கில்லை என்று காட்டி விட்டேன்" என்றார்.

ஒரு கணம் கோபத்தில் துடித்தாலும், மறுகணமே அக்பருடைய கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. பலமாக சிரித்த அக்பர், "போக்கிரிப் பயலே! சாமார்த்தியமாக என்னை மடக்கி விட்டாயா? உன்னுடன் சவாலிட்டு ஜெயிக்க முடியுமா? நீ அதிபுத்திசாலி ஆயிற்றே!" என்று புகழ்ந்தவர், பீரபாலுக்கு பொற்காசுகள் நிரம்பிய ஒரு பட்டுப் பையை பரிசளித்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நேர்மையும்,தைரியமும் இருந்தால் வாழ்வு நேர்மையான வழியில் அமையும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச சார்புடைய தமிழ்க் கட்சிகளால் எதுவும் சாதிக்க முடியவில்லை

உடன்பாட்டு அரசியல் பற்றித் தமிழ்த் தரப்புகள் சிந்திக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றவர்கள் இருக்கவே செய்கின்றனர்.

அதாவது அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதனூடாகத் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல். உரிமையைப் பெற்றுக் கொள்ளுதல் என்ற விடயங்கள் அடையப் பெறலாம் என்ற கருத்துநிலையில் இருப்பவர்களும் உண்டு.

மேற்போந்த கருத்து நிலையில் முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் வெற்றி கண்டார்களாயினும் நம் தமிழ் மக்களுக்கு அது சாத்தியப்படவே இல்லை.

சுருங்கக்கூறின் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்ற அதேநேரம் அரசாங்கத்தை அதட்டுகின்ற சக்தியும் அவர்களிடம் உண்டு.

அதாவது நாங்கள் கேட்பதைத் தராவிட்டால், அரசாங்கத்துக்கான ஆதரவு விலக்கப்படும் என்று அதட்டுகின்ற துணிச்சல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உண்டு.

இதேபோன்று மலையகத் தமிழ் அரசியல் தரப்புகளும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதினூடாகத் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் வெற்றி கண்டு வருகின்றனர்.

தவிர, தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் அரசாங்கத்தை விமர்சிக்கின்ற துணிச்சலும் தனித்துவமும் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகளிடம் உண்டு.

கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகச் செந்தில் தொண்டமான் பதவி வகிக்கிறார் எனில் அங்கு மலையகத் தமிழ் அரசியல் தரப்புகளின் பலம் எத்துணை என்பது புரிதற்குரியது.

தவிர, திருகோணமலையில் புத்த விகாரை அமைப்பதற்குத் தேரர்கள் அனுமதி கோரிய போதும் அதற்குக் கிழக்கு ஆளுநர் மறுத்து விட்டார்.

இங்குதான் செந்தில் தொண்டமானின் தனித்துவமும் அரசியல் பலமும் அரசாங்கத்துக்கும் பௌத்த தேரர்களுக்கும் அஞ்சாத துணிவும் வெளிப்படுகிறது.

இங்குதான் எங்கள் தமிழ் அரசியல் நிலைமை பற்றி ஆராய்வோமாயின் என்ன சொல்வது, ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்துக்குத் தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வருகின்ற போதிலும் அவர்களால் முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போல, மலையகத் தமிழ் அரசியல் தரப்புகள் போல செயற்பட முடியவில்லை என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

உண்மை. தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் எந்தக் கொடுமையைச் செய்தாலும் அதனை ஆதரிக்கின்ற அளவிலேயே அரச சார்புடைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைமை உள்ளது.

உதாரணத்துக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துக்கு நீண்ட நெடுங்காலம் ஆதரவு வழங்கி வந்தாலும் அவர்கள் அரசாங்கத்தை எதிர்க்க முடியாதவர்களாக இருப்பது நிறுதிட்டமான உண்மை.

அவ்வாறு எதிர்த்தால் அவர்களின் அரசியல் மட்டுமல்ல அவர்களின் நடமாட்டமும் அஸ்தமனமாகிவிடும்.

இதன் காரணமாகவே காணி விடுவிப்பு, நில ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல்போனவர்களின் விவகாரம் போன்ற எதிலும் அரச ஆதரவுடைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று என்பதே நிதர்சனம்.

### கஷ்டப்பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டமைக்கு எதிராக

# புதிதாக நியமனம் பெற்ற அதிபர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம்பெற்ற அதிபர்கள் தாம் கஷ்ட பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டமைக்கு எதிராக யாழ். மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மனிதவுரிமைஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள அதிபர்களாகிய தமக்கு புள்ளியிடல் முறைமையின் கீழ் அதி கஷ்ட பிரதேசங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. நாம் ஆசிரியர்களாக பல ஆண்டுகள் அதி கஷ்ட பிரதேசங்களில் சேவையாற்றி வந்துள்ளோம். தற்போது போட்டி பரீட்சையில் தோற்றி, அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளோம்.

அவ்வாறு நியமனம் பெற்ற எம்மை மீள அதி கஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு அதிபராக நியமித்துள்ளமையால் எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அதி கஷ்ட பிரதேசத்தில் ஆசிரியர்களாக சேவையாற்றிய எம்மை மீள அதி கஷ்ட பிரதேசத்திற்கு நியமிக்க வேண்டாம் என கோரியுள்ளனர். (ம-7,33)

### மாவீரர் நாள் ஏற்பாடு

## மட்டக்களப்பில் கைதானவரின் விளக்க மறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மற்றும் அவரது மகனுக்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி முன்பாக ஒருவர் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சுகவீனம் காரணமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாத நிலையில் அவரது மகன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில் இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்தன்று மாவீரர் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## புலிகளின் சின்னத்துடன் மாவீரர் தின நினைவேந்தல்

### இளைஞன் பிணையில் விடுதலை

(சாவகச்சேரி)

மாவீரர் தினம் அன்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு விடுதலைப்புலிகளின் சின்னம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடைய படம்பொறித்த ஆடையுடன் வந்த இளைஞனை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

சாவகச்சேரி நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை எடுக்கப்பட்ட போது கடந்த ஒரு மாத காலமாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த இளைஞன்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞரை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த இளைஞரை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (ம-7,30,33)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மறவன்புலவு பகுதியைச் சேர்ந்த மேற்படி சந்தேக நபர் ஸ்கூட்டி வகை மோட்டார் சைக்கிளில் கஞ்சா பொதியை எடுத்துக் கொண்டு சாவகச்சேரி நோக்கி வந்த வேளையில் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 1கிலோ 800 கிராம்கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.(ம-7,30)

### உள்ளூர் உற்பத்தியாளர்களின் பங்களிப்பு

# பொருளாதார மீட்சிக்கு மிகவும் அவசியம்

### இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு, குறிப்பாக வடக்குமாகாணத்தின்பொருளாதார மீட்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர தயாரிப்பாளர்களின்பங்களிப்பு, ஊக்குவிப்பு என்பது மிகவும்முக்கியமானது என யாழிற்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ் வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறிய நடுத்தர வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவை பொறுத்தவரை சிறிய நடுத்தர உற்பத்தியாளர் 40 வீதமான பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்பை செய்கின்றார்கள். அதேபோல் ஏற்றுமதியில் 50 வீதம் சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களே பங்களிப்பை செய்கின்றனர்.

அதுமட்டுமன்றிவேலை வாய்ப்பு வழங்குவதிலும் இவர்களே முன்னிலையில் உள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் வடக்கு மாகாணத்திற்கும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்கள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் தமது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதற்கு இந்தியாவும் பங்களிப்பை வழங்கும்.

அத்துடன், பொருளாதார உற்பத்தியில் சரியான நடைமுறைகளை பின்பற்றி தர நிர்ணயங்களை செய்வதன் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்திக்கொள்ளமுடியும்.

பொருளாதார உற்பத்தியில் சரியான நடைமுறைகளை பின்பற்றி தர நிர்ணயங்களை செய்வதன் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி கொள்ள முடியும். இந்த கண்காட்சியில் 140 மேற்பட்ட விற்பனை காட்சிக் கூடங்கள் காணப்படுகின்றன.

இவை இன்னும் தரமான கவர்சிகரமாக இருக்கும்போது இந்தியாவிற்கோ ஐரோப்பாவிற்கோ ஏற்றுமதி செய்யும் போது பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும். இத்தகைய கண்காட்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் போது தொடர்பாடல்கள் அதிகரிக்கும் . இவை தொடர வேண்டும் என்றார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை, மகாறம்பைகுளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



22

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**மேலதிக தகவலைக் கோருவதற்கான ஆணைக்குழுவின் தத்துவம்**

மத்திய அதிகாரசபை இச் சட்டத்தின் பாகம் I இன் கீழ் அதன் பணிகளைப் புரிவதற்காக எந் நேரத்திலும் ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய மேலதிக தகவலை இப்பாகத்தின் கீழ் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகையொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளிடமிருந்து கோரலாம் என்பதுடன் அத்தகைய தகவலை அல்லது இப்பாகத்தின் கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையைப் பயன்படுத்தலாம் அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து தகவல், பதிவேடு அல்லது ஆவணத்தைக் கோரலாம்.

**இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தவறுகள்**

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் மூன்றாம் பாகம் அத்தியாயம் I இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தவறுகள் சம்பந்தமானது.

உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதிமுறை அலுவலர்கள், நியாயசபைகளின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் நீதிமருவிய தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற ஆட்கள் மற்றும் பாராளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளின் உறுப்பினர்கள் தொடர்பிலான இலஞ்சம் பற்றி இங்கு விபரித்துக் கூறப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல்நீதிமன்றத்தின் நீதிபதியொருவர் அல்லது நீதிமுறை அலுவலர் அல்லது நியாயசபையின் அல்லது நிறுவனமொன்றின் உறுப்பினரொருவர் அல்லது நீதிமருவிய தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற ஆளொருவர் அல்லது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவர் அல்லது மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவர் அவரது நீதிமுறைத் தன்மையில் அல்லது அத்தகைய உறுப்பினராக அவரது தன்மையில் ஏதேனும் செயலைச் செய்வதற்காக அல்லது செய்யாது தவிர்ப்பதற்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக அத்தகைய நீதிபதிக்கு அல்லது அலுவலருக்கு அல்லது உறுப்பினருக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற ஆள் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற் தண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பகிரங்க உத்தியோகத்தர்களை நேர்காண்பதற்காக பாராளுமன்றத்தின் மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர்கள் அவாநிறைவை ஏற்றுக்கொள்ளல், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமாதான அலுவலர்கள் மற்றும் வேறு பகிரங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான இலஞ்சம்.

ஒப்பந்தங்கள் தொடர்பாக உதவி வழங்குதல் அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கான இலஞ்சம், கேள்விப்பத்திரங்களை மீளப் பெறுவதனைச் செய்விப்பதற்கான இலஞ்சம், அரசாங்க அலுவல் தொடர்பிலான இலஞ்சம், உரிமைக் கோரிக்கைகளின் கொடுப்பனவு, நியமனங்கள், தொழில்கள், மானியக் கொடைகள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் தொடர்பிலான இலஞ்சம்.

அரசாங்கத்துடன் கையாளுகைகளைக் கொண்டுள்ள ஆட்களினால் பகிரங்க உத்தியோகத்தர்களுக்கான இலஞ்சம், மாகாண சபை யொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினர் ஒருவர் தொடர்பிலான இலஞ்சமும் மாகாணசபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் அல்லது அட்ட வணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அத்தகைய அட்ட வணைப்படுத்தப்பட்ட நிறுவனத் தின் ஆளும் குழுவின் உத்தி யோகத்தர் தொடர்பிலான இலஞ்சமும், வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பிலான இலஞ்சம், தனியார் துறையிலான இலஞ்சம், இவைபற்றியெல்லம் இவ் அத்தியாயத்தில் விபரித்துக் கூறப்பட்டுள்ளது.

மேலும் மாகாணசபை யொன்றின், உள்ளூரதிகாரசபையொன்றின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப் பட்ட நிறுவனமொன்றின் ஆளும் குழுவொன்றின் உறுப்பினரின் வாக்கின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அச்சுறுத்தல்கள் அல்லது மோசடியைப் பயன்படுத்தல் பற்றியும் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான தவறுகள் பற்றியும் இவ் அத்தியாயத்தில் விபரித்துக் கூறப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழான தவறாளர் ஒருவர் பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றஞ் சாட்டப்படலாம்.

**நடவடிக்கைமுறைசார் தவறுகள்**

இப் பாகத்தின் அத்தியாயம் II இல் நடவடிக்கைமுறைசார் தவறுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும், உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்று என்றாற் போன்று உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்படலாலாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கான நியாயாதிக்கம் இச் சட்டத்தின் மூலம் உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாக்கவும் படுகின்றது.

பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது வேறு அலுவலரை எதிர்த்தல் அல்லது அவர்களின் கடமைகளுக்கு முட்டுக்கட்டையிடல், ஆணைக்குழுவின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு மறுத்தல், அசட்டையாகவிருத்தல் அல்லது நிறைவேற்றாது விடுதல் இவையெல்லாம் குற்றமாகக் கருதப்படும்.

முற்றும்.

# 77 சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் செயலிழப்பு

(கொழும்பு)

நாட்டின் கரையோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் செயலிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பில் 77 சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

செயலிழந்த 77 கோபுரங்களில் 11 எச்சரிக்கை கோபுரங்கள் பேரிடர் மேலாண்மை மையத்திலிருந்தும் 9 எச்சரிக்கை கோபுரங்கள் கீழ் மட்டத்திலிருந்தும் செயற்படுத்த முடியும் என கூறப்பட்டுள்ளது.

எனினும் மற்றைய 57 எச்சரிக்கை கோபுரங்கள் முற்றிலும் செயலிழந்த நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், எச்சரிக்கை கோபுரங்களுக்கான தொழில் நுட்ப நிபுணத்துவம் அமெரிக்க சமிக்ஞை நிறுவனம் ஒன்றிடம் வழங்கப்பட்டு வந்தது.

எனினும் பின்னர், பேரிடர் முகாமைத்துவ மையத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் மாவட்ட அளவில் பொலிஸ் மற்றும் இராணுவம்பொறுப்பேற்றுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்குக்...

வேலி தோப்புப் பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சாறுயன் (வயது-23) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

டெங்குக் காய்ச்சலுக்குள்ளான நிலையில், அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், மூளைச் சாவடைந்திருந்தார்.

இந்நிலையில் தொடர்ந்து இளைஞனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளார். (ம-7,33)

## ஆலயத்தில்...

ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் இராசரத்தினம் (வயது - 88) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஆலயத்துக்கு தினமும் சென்று தேவாரம் ஓதிவரும் மேற்படி வயோதிபர் நேற்று புதன்கிழமை காலை வல்வெட்டித்துறை வேவில் பிள்ளையார் கோவிலில் வசந்த மண்டப பூசை இடம்பெற்றபோது ஒலிவாங்கியில் தேவாரம் ஓதிக் கொண்டிருந்துள்ளார்.

அச்சமயம் அவர் திடீரென மயங்கி கீழே விழுந்துள்ளார். உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7,60)

## கிணற்றில்...

இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கவேலு (வயது-57) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். (ம-7,316)

## இனப் பிரச்சினை...

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என அழைப்பு விடுத்தேன்.

ஆனால் நாங்கள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. இந்த நாட்டில் இன்று தீர்க்கப்பட வேண்டிய இரு பிரதான பிரச்சினைகள் உள்ளன.

அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எம்முடன் இணைந்து செயற்படுமாறு மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன். நாட்டில் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது முதல் விடயமாகும். இரண்டாவது விடயம் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகும்என்றார். (ம-7)

## இந்தியாவின்...

ஈடுபட்டுள்ளன, எல்லைத் தகராறு தீர்க்கப்படாததால் இதற்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. ஆகவே நாங்கள் விசேட கரிசனைகளை கொண்டுள்ளோம்.

இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டவர்களிற்கு இந்தியா புகலிடம் வழங்குவது குறித்த விசேட கரிசனைகளை கொண்டுள்ளது. இதேபோன்று எங்கள் கரிசனைகளை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தீக்காயத்துக்...

மேலும் தெரியவருகையில்,

கடந்த 19ஆம் திகதி குறித்த முதியவர் மண்ணெண்ணெய் ஊற்றி நுளம்புக்கு புகைபோட்டுக் கொண்டிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக அவரது உடையில் தீப்பற்றியது.

இந்நிலையில் அவர் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## அரசியல்...

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே நியூசிலாந்து தூதுவர் மேற்கண்டவாறு கூறினார் என்று சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கைக்கான தூதுவர் பதவியிலிருந்து விரைவில் விடைபெறவுள்ள நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் என்னைச் சந்தித்தார்.

இது நல்ல சந்திப்பு. இதன்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசினோம். அதிலும் முக்கியமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசினோம்.

இலங்கையில் அமைதியையும் நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான - நிலையான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன் னேற்ற மடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன்.

அதேவேளை, சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன். வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவருக்குத் தெளிவுபடுத்தினேன்.

எனது கருத்துக்களை நியூசிலாந்து தூதுவர் ஏற்றுக் கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்றும், அங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்றும் கூறிய நியூசிலாந்து தூதுவர், அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்று தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்குக்கு தான் நேரில் விஜயம் செய்து பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

இலங்கைக்கும், இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார்" என்று சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2023.12.27
சீட்டிழுப்பு இலக்கம் 0167
A 9 8 2 8 1 0 A

தன நிதானய
திகதி - 2023.12.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1371
G 01 05 08 44 G
47766

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3583
சீட்டிழுப்பு திகதி 27.12.2023
Z 11 32 49 75
Z 14250

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.27
சீட்டிழுப்பு இலக்கம் 0650
கடகம் 02 24 25 42 கடகம்
57896 07

மஹஜன சம்பத
திகதி 2023/12/27
சீட்டிழுப்பு இலக்கம் 5341
C 2 4 1 6 5 1

மெகா பவர்
திகதி 27/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1689
Q 15 12 20 34 75
50347

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.12.2023 வெற்றி வாரம் 049 வர்ணம் பசுமை
Q 0 4 3 8 4 7
86281
24,925,563.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2315 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.27 தினம் புதன்கிழமை
35 42 44 46 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,636,065.60
81351

சனிதா
திகதி 2023.12.27 வெற்றி வாரம் 4476
05 14 55 68 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,109,489.60
83044

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4027 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.12.27 தினம் புதன்கிழமை
04 24 35 54 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,458,973.20
631794

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 29 01 09 23 66
1491
2023.12.27 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 482,785,604.20

ஜயோதா Jayoda
திகதி 2023.12.27 வெற்றி வாரம் 1986 வர்ணம் மஞ்சள்
19 42 48 51 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,170,031.60
14584

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2141
சீட்டிழுப்பு திகதி: 2023.12.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,063,202.40
02 39 68 74 E
561452

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18329)

076 825 7716 (ஆகாஸ்)


# வாள்வெட்டுடன் தொடர்புடையவர் கைது

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கோப்பாய் கொட்டைக்காடு பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தினால் மூன்று திறந்த பிடியாணைகள் விடுக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகி இருந்தபோதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் கோப்பாய் பொலிஸாரும் இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து 15 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ம-7)


**தரம் 6 (2024)**
**குழு வகுப்புகள்**
ஆரம்பம் : 30.12.2023
சனிக்கிழமை 11.30
- அனைத்து பாடங்களும்
- ஆங்கில, தமிழ் மொழி மூலம்

(18397)
NEWTON GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎-077 792 3653

**CANADA VISITOR VISA**
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8035)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**Canada and Italy Visa**
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும். (18358)
VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584

**மணமகள் தேவை**
1984 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற நிரந்தர வருமானம், சொந்த வீடும் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
Viber or Whatsapp
0044 7578 626565,
077 251 9150 (18318)
Email add: rajasasikumar@gmail.com

**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (Foreign Breed)**
தென்னாபிரிக்காவில் வளர்க்கப்படும் உயரமான மற்றும் நீளமான பெரியநாய்
அந்த வகையினைச் சேர்ந்த நாய்க்குட்டிகள் எம்மிடம் விற்பனைக்கு உள்ளன.அந்த நாய்க்குட்டிகளின் Original தாய்,தகப்பன் எம்மிடம் உள்ளன பார்வையிடலாம்
077 695 4530 (18394)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

**உடனடி வேலை வாய்ப்பு**
கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
- முகாமையாளர் ஆண் / பெண்
- விற்பனை உதவியாளர் ஆண்
- கணக்குப் பதிவாளர் ஆண் / பெண்
- களஞ்சியக் காப்பாளர் ஆண்
- சுத்திகரிப்பாளர் பெண்

பொருத்தமானவர்கள் 077 743 5265 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (C-8030)

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்** DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18357)

**GCE (O/L) கணித பாட வகுப்பு**
கணித பாடம் சித்தியின்றி உயர் தரம் கற்க முடியாதுள்ள மாணவர்களுக்கு 20 வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தனிப்பட்ட முறையில் கற்பித்துத் தரப்படும். (18392)
078 859 6170


**சிறிராம் ஜுவல்லர்ஸ்**
இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.



- செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும். (C-8029)

077 165 1729, 077 773 0567,
021 222 8334


## உள்ளம் கனிந்து மனம் மகிழ்ந்து வாழ்த்தி நிற்கும் பாடசாலை சமூகம்





கனடா மெட்ரோலான் மீடியாவின் இலங்கைக்கான பிரதிநிதியும் மற்றும் சமய, சமூக மட்ட சேவையாளரும் இலங்கை பொது அமைப்பு பலவற்றில் தன்னை பிரதிநிதத்துவப்படுத்தி சேவையாற்றி பல தரப்பட்ட விருதுகளைக் பெற்றுவரும் சமூகத்தொண்டரும் ஓயாத சேவையாளரும் தேவை அறிந்து தேடிச்சென்று சேவையாற்றி வரும் லயன் கலாநிதி **நாகலிங்கம் தனேந்திரன் சமாதான நீதவான்** MAF அவர்கள் **28.12.1956** இல் பிறந்து **28.12.2023** இல் தனது **68 வயதில்** காலடி எடுத்து வைக்கும் வேளை அவரது சேவைகள், பதவிகள் அனைத்தும் மேலோங்கி அவருடைய வாழ்க்கை சிறப்புற்று என்னும் பல காலம் நீடுழிவாழ வேண்டுமென இறைவனை வேண்டி மற்றும் யாழ்ப்பாண கொட்டடி மண்ணில் பிறந்து அந்த பகுதி மக்களுக்காகவும் மற்றும் மக்களினுடைய நலனுக்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையைச் செய்து கண்டி மாநகரத்தின் இரத்தினதீபம் அமைப்பின் வடக்கிற்கான பிரதிநிதியாகக் தெரிவு செய்யப்பட்டு சர்வோதயம் செதோசயம் யு.ஆர்.ஜ மற்றும் நுழைவாயில் லயன்ஸ் கழகம் இவற்றையெல்லாம் அலங்கரித்து நிற்கும் அவரது சேவை எமக்கு தேவையென வேண்டி நிற்கும் பாடசாலை சமூகம் யாழ்ப்பாணம் மநாகர சபையின் உறுப்பினராகக் தெரிவு செய்யப்பட்ட யாராலும் மறக்க முடியாத இடத்தை பிடித்துக் கொண்டவர் என்பது யாவரும் அறிந்த உண்மை.

**வடக்கு பாடசாலை சமூகம் சார்பில்**
**செட்டித்தெரு பாடசாலை அதிபர்**

(18365)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. ... பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org